469

Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறநில்.

| | | |
|---|---|---|
| வெண்டாமரை உ. | 1914-ம் ஆ௵ ஜூலை மீ | இதழ் எ. |



பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா | ரூ 1 | வெளிநாட்டுக்கு | ரூ 2 |
| தபாற்கூலி | அணா 4 | தனி சஞ்சிகை | அணா 2 |

Saigon Sinnaya Press, Pondicherry.

## உள்ளுறை.


பக்கம்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்கப்பிள்ளையவர்கள் சரிதம் :— ஸ்ரீமான் தி. வடிவேலுமுதலியார், திருவெண்ணெய்நல்லூர். ... 146

தோடர்கள் : — ஸ்ரீமான் ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், புதுவை. 149

ரமணி ( ஓர் காதற் கதை ) : — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. ... ... ... ... 151

இந்துக்களின் பூர்வீக இரண வைத்தியம் : — (சுதேசமித்திரன்.)... ... ... ... ... ... 156

பிரகிருதி சாஸ்திரம் : — பாரதி பக்தன்:... ... ... 157

சிவகசிந்தாமணி : — பத்திராதிபர். ... ... ... 159

ஐயவினை : — T. R. M. S. ... ... ... ... 162

தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் : — இலக்கணக் குட்டி. ... ... ... ... ... ... 163

நியாயமாலா : — ஸ்ரீமத் அநந்தபத்மநாபஸ்வாமிகள், காஞ்சிபுரம். ... ... ... ... ... 164


சன்மார்க்கம்:—ஸ்ரீமான் பொ. மாணிக்கசெட்டியார், தாதம்பேட்டை,பழூர். ... ... ... ... 165

குருபக்தி : — ஸ்ரீமான் M. V. சுப்ரமண்ய ஐயர். ... 167

புத்தக வரவு. ... ... ... ... ... ... 169

சமாசாரம். ... ... ... ... ... ... 169

472



473

உ

ஸ்ரீவாணிசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை உ. ] 1914-ம் ௵ ஜூலை ௴ [ இதழ் எ.

## இலௌகிகப் பகுதி.

### திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்கப்பிள்ளையவர்கள் சரிதம்.

தரிசிக்க முத்தியளிக்கும் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு அணித்தாய 'மருதூர்' என்னும் பதியில் கருணீக குலதிலகராய் வாழ்ந்துவந்த இராமையப்பிள்ளை என்பார் ஐந்து பெண்களை மணந்து அவர்கள் புத்திரப்பேறின்றி ஒருவர்பின் னொருவராய் மரிக்க, பின் ஆறாவதாக, "பொன்னேரி" என்னுங்கிராமத்தில் கற்பிற் சிறந்த சின்னம்மையார் என்னும் பெண்மணியை மணந்து இல்லறம் நடாத்திவருங்கால், இறைவனருளால் சபாபதிப்பிள்ளை பரசுராமப்பிள்ளை என்னும் இரண்டு ஆண்மக்களையும், சுந்தரம்மாள், உண்ணாமுலையம்மாள் என்னும் இரு பெண்மக்களையும் பெற்று மகிழ்ந்தனர். சிவபுண்ணியத்தின் முதிர்ச்சியால் சிவயோகியாரொருவர் இவர்களின் வீடணுக, அவருக்குச் சின்னம்மையார் அன்போடமுதளித்து அவர் தந்த முதற்பிடி சேடத்தை உட்கொண்டதின் பலனாக, கலி 4925, சுபானு ௵ புரட்டாசி ௴ 21-ம் ௳ பூர்வ பக்கம் துதியை ஆதிவாரம் உதயாதி $29\frac{3}{4}$ நாழிகைக்கு மீன லக்கினம் சித்திரை நக்ஷத்திரம் நாலாங்கால் துலா விராசிகூடிய சுபதினத்தில், (1823-ம் ௵ அக்டோபர் ௴ 5-ம் ௳) அறுமுகனனையவோர் ஆண் மகவைப் பயந்தனர். அம் மகவிற்கு "இராமலிங்கம்" என நாமகரணஞ் சூட்டி வளர்த்துவரும் நாளில், தந்தையார் சிவபதமுற, சகோதரர் சபாபதிப்பிள்ளை தந்தைக்குச்

செய்யவேண்டிய சமாதி கிரியை முடிப்பித்து, பின் குடும்பத்தோடு ஆருவது மாதத்தில் சென்னையம்பதிக்குச் சென்றனர்.

அங்கு, சபாபதிப்பிள்ளை உபாத்திமைத் தொழிலால் தமது குடும்பத்தைப் பாதுகாத்துக்கொண்டு, காஞ்சிபுரம் சபாபதிமுதலியார் எனும் வித்வ சிரோமணியிடம் அரிய இலக்கண இலக்கியங்களைப் பயின்று வந்தனர். இங்ஙனம் தமையனு ராதரணையிலிருந்த சிறுவருக்கு வயது 5 ஆனதும், சபாபதிப்பிள்ளையே இவருக்கு ஆசிரியராக இருந்து கல்வி பயிற்றுவித்தனர். பூர்வ புண்ணியத்தின் பயனுகவும் உலகுய்யவு மவதரித்த நம் சிறுவர் வரவரக் கல்வியில் வளர்பிறைச் சந்திரனுனர். பின்னர் தமது ஏழாவது வயதில், சிவாலய பூஜை சிவாசாரியார்பால் சிவதீக்ஷை பெற்று அது முதல் ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளைத் தமது ஆசாரியராக மனத்துட்கொண்டு ஸ்ரீ சுப்ரமண்யக் கடவுளை உபாசித்து வருவாராயினர். சேவற்கொடியோன் றிருவருளால் பிள்ளையவர்கள் சகலகலை ஞானங்களையும் தாமே ஓதி உணர்ந்து பதி பசு பாச நூற்களில் வல்லவரானுர். பின் ஒன்பதா மாண்டில் சஷ்டி உபவாசமிருந்து திருத் தணிகேசன்மீது தோத்திரப்பா வோதுவாராயினர். வயது பதினுருகவும், திருவொற்றியூர்த் தியாகப்பெருமானை நாள்தோறும் சென்று வழிபடும் முறையைத் தமது கடமையாகக்கொண்டார். இப்படிச் சில்பகல் செல்ல, சிவபெருமான் குருமூர்த்தங்கொண்டு மணிவாசகப் பெருமானுக்குத் தரிசனந் தந்ததொப்ப, இவருக்கு ஞானுசாரியர் தரிசனமாகி அனுக்கிரகித்து மறைந்தருளினுர். அது முதல் நமது பிள்ளையார் திருவருட் பிரகாச வள்ளலாரெனப்பட்டு 'அருட்பா' பாடத் தொடங்கினுர். இவரது ஞான முதிர்ச்சியை யுணராத இவரது குடும்பத்தார், இவரைத் தொந்தரை புரிந்து இவரது தமக்கை புத்திரியை மணம்புரிவித்தனர். ஆயினும் பிள்ளையார் உலக விஷயங்களில் எவ்வகைப் பற்றுமின்றிச் சதாநந்த சகச நிட்டையுடையவரானுர். சுவாமிகளின் ஞான முதிர்ச்சியைக் கண்ட பலர் இவர்க்கு மாணுக்கராயினர். கடல் மடைதிறந்தாலென்ன, இவரது வாக்கினின் றெழும் அருமைப் பாக்களைக் கண்டு மனமுருகாதா ரெவருமிலர். மாணுக்கரிற் சிலர் அப் பாடல்களைப் பலரும் உணரவேண்டுமெனும் ஆவலுடையாராய், அச்சுவாகன மேற்றி, "திருவருட்பா" எனும் திருநாமஞ்சூட்டி வெளிப்படுத்துவாராயினர். அது கண்ட யாழ்ப்பாணம் ஸ்ரீ ஆறுமுகநாவலர் என்பார், நால்வர் பாடிய தேவார திருவாசகங்கட்கே அருட்பாவென்னும் பெயர் ஏற்குமேயன்றி, இப்பாடல்கட்கு அப்பெயர் தகாதெனக் கூற, பின்னர் பிள்ளையார் மாணுக்கர்கட்கும் நாவலரை உள்ளிட்டார்க்கும் பல புத்தக ரூபமாகச் சிலகாலம் வாதங்கள் நிகழ்ந்தன.

பின்னர், சுவாமிகள் தமது 45-வது வயதில் "பார்வதிபுரம்" எனும் வடலூரில் தருமசாலை என்று ஓர் கட்டடமியற்றி, அதில் தாமிருந்து கொண்டு தமது மாணாக்கர்கட்கு உபதேசம் செய்து பலரைப் பத்தி வலையிற் படுத்தினர். மாமிச பக்ஷணிகளாயிருந்த அநேகர் நமது சுவாமிகளின் உபதேசத்தின் பலனாக அதைவிட் டொழித்தனர். பின்னர் அவ்விடமே 40 காணி விஸ்தீரணமுள்ள இடத்திற்கு, உத்தர ஞான சிதம்பரம் எனப் பெயரிட்டு அவ்விடத்தில் "சத்திய ஞான சபை" என்னும் பெயரால் சிற்சபை யொன்று அகமுகமாயுள தத்துவத்தை விளக்குவதாகக் கட்டி முடித்தனர். இன்றும் அக் கட்டடத்தைக் கண்ணுறும் ஞானிகள் அது இதயாம்பர வெளியை, பகிர்முகமாக எவரு முணருமாறு காட்டுந் தன்மையை அறிந்து வியப்புறுகின்றார்கள். சுவாமிகளின் பாடல்களில் "செத்தாரெழுவரென்று கைத்தாளம்போடு" எனக் கூறியுள்ளதின் உண்மைப் பொருளுணராத பலர், தங்கள் தங்களின் முன்னோர்களை எழுப்பித்தரல் வேண்டுமென இவரைத் தொந்தரைபுரிவாராயினர். சுவாமிகள் அவர்கட்கேற்ற சமாதானங் கூறி "மேட்டுக்குப்பம்" என்னுங் கிராமத்துள்ள சித்திவளாகத் திருமாளிகையில் எழுந்தருளி, பல அரிய பாடல்களைப் பாடுவாராயினர்.

இங்ஙனம் நாள் சில கழிய, ஒரு நாள் தமது மாணாக்கர்களைப் பார்த்து "நாம் சிறிதுகாலம் தனித்துச் சதானந்த சமாதி நிட்டை கூட இச்சித்துள்ளோம். எமது சரீரம் உங்கள் கண்கட்குத் தோற்றாவண்ணம் மறைந்துபோகும். இக் காயத்தை அக்கினியிற் றகிக்கவேணும், மண்ணிற் புதைக்கவேணும் உங்களால் இயலாது. நாம் இரண்டரை தேவ கடிகையில் வெளிப்படுவோம். அக்கால் எழுதாக் கிளவியாகும் சமரச வேதமும் வெளிப்படும்" என உரைத்து, ஓர் சிறு அறைக்குட் சென்று (ஸ்ரீமுக ௵ தை ௴ 19-ம் ௳ சுக்கிரவாரம்) கதவைத் தாளிட்டுக்கொண்டனர். பின்ன ராசாங்கத்தார் பரிசோதித்ததில் அவ்வறை வெறுமையாகக் காணப்பட்டது. இன்னும் ஷெ அறையை அடியார் பலர், கண்போன்று காத்துவருகின்றனர். ஒவ்வொரு வருடமும் தை மாத புஷ்ய நக்ஷத்திரத்தன்று சுவாமிகட்குக் குருபூஜை நடைபெற்று வருகின்றது. அப்போழ்து அங்குத் தரிசனைசெய்வார் எவரும் மனமுருகி அன்பின் வலையிற்படா தொழிந்திலர். சுபம்.

தி. வடிவேலுமுதலியார்,

திருவெண்ணெய்நல்லூர்.

# தோடர்கள்.

---

பங்காளத்துச் சந்தலர்களும், மத்திய இந்தியாவின் பீலர்களும், மத்திய மாகாணத்துக் காண்டர்களும், தென்னிந்தியாவிலுள்ள தோடர்களும், மற்றும் சிலரும் இந்துதேசத்தின் பூர்வீக குடிகளாவார்கள். இவர்களில் தென்னிந்தியாவில் நீலகிரிமலையில் வசித்துக்கொண்டிருக்கும் தோடர்களின் பழக்க வழக்கங்களும் ஆசாரம் நடவடிக்கைகளும் நமது செல்வக் கலைமகளை வாசிக்கும் நண்பர்களுக்கு இன்பம் தராமற் போகா. 'இடையன்' என்று அர்த்தம் கொடுக்கிற 'தோடவன்' என்ற பதத்திலிருந்து 'தோட' என்கிற வார்த்தை வருகிறது. சிலர் இவர்கள் கிரீக் ஜாதியாருடன் சம்பந்தப்பட்டவர்களென்றும், 'அலெக்சாந்தர்' அல்லது 'டைரயஸ்' இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபோது இங்கே வந்தவர்களென்றும் நினைக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் உற்பத்தியைப்பற்றிச் சிறிதும் அறியார்கள். பூர்வம் இவர்கள் பல்லாயிரம் பேர் இருந்தார்கள் எனினும் இப்போது ஏறக்குறைய 800 பேர்தானிருக்கிறார்கள்.

தோடர்கள் மாடு மேய்ப்பவர்கள். இவர்கள் பட்டணங்களிலாவது கிராமங்களிலாவது வசிப்பதில்லை. கூட்டமாகவும் வசிப்பதில்லை. ஆனால் உதகமண்டலத்தைச் சுற்றிலும் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாக ஒவ்வோரிடத்தில் வசிக்கிறது. ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் பெரியதோர் காடுமுரடான சுவர் இருக்கிறது. தோடர்கள் இந்தக் கட்டடத்தைப் பரிசுத்தமெனக் கருதி ஐரோப்பியர்களை இதனருகே வரவிடுவதில்லை. இதனுள்ளே பரிசுத்தமான தொழிலாகிய பால்கறத்தல், வெண்ணெய் எடுத்தல், நெய் உருக்குதல் முதலியவை செய்யப்படுகின்றனவாதலின், குலதெய்வத்தைத் தீட்டாக்காமலிருக்கும் பொருட்டுத் தோடனைத் தவிர வேறொருவனையும் உள்ளே விடுவதில்லை. தோடரின் குடிசை வண்டியின் கூண்டை ஒத்திருக்கிறது. அதன் உயரம் 12 அடி. ஒரு மூலையில் இரண்டடி உயரமுள்ள ஒரு சிறு கதவு இருக்கிறது; ஆனால் சன்னலாவது வேறு திறப்பாவது கிடையாது. குடிசைக்குச் சிறிது தூரத்தில் 40 கஜம் குறுக்களவுள்ள ஓர் அடைப்பு எருமைகளை இரவில் அடைத்துவைக்கப் பட்டியாக இருக்கிறது. காலையில் சில தோடர் சுத்தம் செய்துகொண்டு பால் கறக்கிறார்கள். பிறகு எருமைகளை மேய விட்டு, பாலைத் தயிராக்கித் தாழவிருக்கும் ஊர்களுக்கு அனுப்புகிறார்கள். தோடர் எருமைகளைத் தவிர, கோழி முதலிய பக்ஷிகளையாவது பன்றி

477



முதலிய மிருகங்களையாவது வளர்ப்பதில்லை. இந்துக்கள் புண்ணிய மிருகமெனக் கருதும் பசுவையும் அவர்கள் அவ்வளவு சிலாக்கியமாக நினைப்பதில்லை. தோடருடைய ஐசுவரியம் அவர்கள் வைத்திருக்கும் எருமைகளின் தொகையால் மதிப்பிடப்படுகிறது. சில வருஷங்களுக்கு முன் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது, தோடர்களுக்குக் கிறிஸ்துவ மதபோதனை செய்துகொண்டிருந்த ஒரு பாதிரி "நமது சக்ரவர்த்தியின் குமாரராகிய வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அவர் ஏராளமான பணக்காரர். அவருடன் 200 பேர் அடங்கியதோர் பரிவாரம் வந்திருக்கிறது" என்று சொல்ல, அவர்களில் கிழவனொருவன் தலையை அசைத்து, "ஆம், ஆம், எத்தனை எருமைகளைக் கொண்டுவந்திருக்கிறார்" என்று புத்திசாலித்தனமாகக் கேட்டானாம். தோடச் சிறுவன் பாலிய முதற்கொண்டே மேய்க்கப் பழகுகிறான். தோடர்களுக்கு விறகு, ஜலம், எருமைக்குப் புற்பூண்டு தவிர வேறுவிதமான கவலையே கிடையாது. இவர்கள் சிக்கன மற்றவர்கள், சோம்பேறிகள். தம் ஜீவனத்துக்கு வேண்டிய வளவுக் கதிகமாக வேலைசெய்யவேமாட்டார்கள். அவர்கள் தலையை ஒருபோதும் மூடுவதில்லை. ஆடவரும் ஸ்திரீகளும் தங்கள் மயிரை வளரவிடுகிறார்கள். அது முழுக் கறுப்பாகவும் மிருதுவாகவு மிருக்கிறது. அவர்களுக்கு அழகான காக்கை மூக்குகள் உண்டு. பற்கள் வெண்மையும் அழகுமானவை. அவர்கள் களிப்பும் உல்லாசமுமுள்ள ஜனங்கள். ஆனால் முழுச் சோம்பேறிகள்.

சிலர் சிறு கடுக்கனையும் கழுத்தைச் சுற்றி வெள்ளிச் சங்கிலியையும் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகள் முறுக்கின மயிரையாவது, மணி சோழி கிளிஞ்சில் கோத்த கறுப்புக் கயிற்றையாவது கண்டமாலையாகத் தரித்துக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகள் புருஷர்களுக்கு உயர முதலியவற்றில் ஏற்றவர்களாக விருக்கின்றனர். ஆனால் இவர்கள் வெயிலில் அதிகமாகப் போகாதபடியால் புருஷர்களைவிடச் சிறிது வெளுப்பான நிறமுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் அழகாய்க் கறுத்துச் சுயேச்சையாய் வளர்ந்து தொங்கிக்கொண்டிருக்கிற மயிர்ச் சுருள்களை உடையவர்கள். ஸ்திரீகள் நடத்தையில் ஸ்வாதீனமானவர்கள். அவர்களுக்கு நம் ஸ்திரீகளைப்போல் நாண முதலியவை தெரியாது. சித்த ஸ்வாதீனத்துடனும் முழு நம்பிக்கையுடனும் அன்னியரிடம் தாராளமாய்ச் சம்பாஷணை செய்வார்கள். இவர்களுக்காவது இவர்கள் ஆடவர்களுக்காவது சுத்தம் என்பது தெரியாது. தங்கள் கூந்தலுக்கு நெய் தடவி அதை மயிர்ச் சுருளாக வளர்க்கும் அருவருப்பான வழக்கமும் இவர்களிடமிருக்கிறது. புருஷர்கள் மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்

கும்போது இவர்கள் தங்கள் வீட்டு வேலைகளை மந்தமாயும் சோம்பேறித்தனமாயும் பார்ப்பார்கள்.

மந்தை சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பிவரும்போது கிராமத்தார்கள் வலக்கையைத் தலைக்கு நேராக எடுத்து, கட்டை விரலை மூக்கில் வைத்து, கையைத் திறந்து, விரல்களை அகற்றி, ஒருவிதமான அலங்காரச் சலாம் செய்வார்கள். பால், வறுத்த தானியம், வெண்ணெய் இவையே இவர்களுக்குச் சாயங்கால போசனமாம். சமீபகாலம் வரை அவர்களுக்கு உப்பு என்பதே தெரியாது. தோடர்களுக்கு டம்பம் என்பதே இல்லை. மாமிசத்தை ஒருபோதும் தொடுவதில்லை. விளக்கேற்றப்படும்பொழுதும் மேற்சொன்ன விதமான மரியாதையே செய்யப்படுகிறது.

குழந்தைகள் நிர்வாணமாய் அங்கு மிங்கும் ஓடுவார்கள். சிறு பெண்கள் கோயிலுக்குள் நுழைவதில்லை. குழந்தை பிறந்தவுடனே அது வஸ்திரத்தில் மூடப்பட்டு, தகப்பனிடம் கொடுக்கப்படுகிறது. அதை அவன் கோயிலுக்குக் கொண்டுபோய் மூடியிருக்கும் துணியை விலக்கிவிட்டு அதன் நெற்றியைக் கீழே அழுத்திக்கொண்டு நமஸ்காரம் செய்து, "நன்மையாயிரு, கோழிக் குஞ்சுகளோடும், ஜனங்களோடும், ஆடுமாடுகளோடும், கன்றுகளோடும், ஒவ்வொருவரோடும் நன்றாயிருக்கட்டும்" என்ற ஜெபத்தோடு அதைச் சுற்றிக்கொண்டுபோய்விடுகிறான்.

( இன்னும் வரும். )

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்,
கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்,
புதுவை.

---

## ரமணி.

### ஓர் காதற் கதை.

( தொடர்ச்சி. )

அத்தியாயம் 6.

என் செய்வான் ஜனார்த்தனன்! சென்ற பத்துமணி நேரத்திற்குள் என்னென்ன விஷயங்கள் நிகழ்ந்துவிட்டன! ஓர் தீர சந்யாசியின் தரிசனம், ரமணி குருவியின் காலில் கட்டியனுப்பிய கடிதங்கள், சந்

479



யாசியின் கர்ஜனைக் குரல், விஜய விலாசத்திற்கு விஜயஞ்செய்தமை, அங்கிருந்து ரமணி மாயமாய்க் காணாமற்போனமை, அவள் முத்தம்மாளுக்கு எழுதிய கடிதம், சந்யாசியிடம் தனக்குண்டான பிரமை, தன் மனத்துக் கிளர்ச்சிகளை அவர் அறிந்து தெளிவாகச் சொன்ன சக்தி, இப்பொழுது ரமணி கையால் எழுதப்பெற்ற ஒரு கடிதங் கிடைத்தமை இவ்வளவு விஷயங்களையும்பற்றி விழித்திருந்தவாறே ஒரு கனவு கண்டான். சிறந்த வக்கீலாயிருந்தபோதிலும் அச்சமயம் சுவாமியிடம் போய் ஆலோசனை கேட்பதைவிட அவனுக்கு வேறொரு யோசனையும் தோற்றவில்லை. ஆகையால் சுவாமியிருக்கும் அறைக்கு ஓடினான். அவரும் அவனுமாக நெடுநேரங் கலந்தாலோசித்தார்கள். ஆலோசித்ததில், போலீசாருக்கு அக் கடிதத்தைக் காட்டாமல் மூன்று தினம் பொறுப்பதே நலமென்று தீர்மானித்தார்கள். மூன்றாம் நாள் தபாற்காரன் ஒரு கடிதங் கொணர்ந்தான். அதில், "ஸ்ரீமான் ஜனார்த்தனர் பார்வையிட்டு ஸ்ரீமத் சரஸ்வதிதாச சுவாமிகளுக்கு அளிப்பது" என்ற விலாசமிடப்பட்டிருந்தது. மூன்று நாளாகத் தன்னகத்தில் வசிக்கும் சுவாமியின் பெயரை அப்பொழுதுதான் அறிந்தான் ஜனார்த்தனன். அக்கடிதத்தைக் கண்டதும் சந்யாசி மிக வியப்புற்று அதைப் பிரித்துப் பார்த்தார். இக் கடிதமும் முன் கடிதத்தைப்போல் ரமணியின் கையால் எழுதப்பட்டிருந்தது. அதிலடங்கிய விஷயமாவது:—

"சுவாமீ, ரமணி என்ற பெண்ணைத் தேடும் விஷயத்தில் நீங்களும் தலையிட்டிருப்பதாக நேற்றுத்தான் அறிந்தோம். நாங்கள் விதிப்பதைச் செய்து முடிக்காத பக்ஷத்தில் ரமணியைக் காண உங்களாலும் முடியாது, உங்கள் குருநாதனாலும் முடியாது. நாங்கள் விதிக்கும் காரியம் என்னவென்றால், இந்த வைகாசி மீ 25-ம் உ ஸ்ரீமான் சடகோபருடைய புத்திரி சாவித்திரியம்மாளுக்கும், அந்த அம்மாளுக்கு எவ்விதத்திலுந் தகாத மிராசுதார் விஜயரங்கதாசக் கிழவருக்கும் நிகழவிருக்கும் விவாகத்தை நிகழாதவாறு தடுத்துவிடுவதுதான். இந்த நற்காரியத்தை நிறைவேற்றிச் சுகிர்தம் பெற்று ரமணியம்மாளை மீட்டு உங்கள் ஜனார்த்தனரை மகிழச் செய்யுங்கள். இக்காரியத்தை நிறைவேற்ற ஜனார்த்தனரைவிட உங்களுக்குத்தான் அதிக சக்தியிருக்கிறதென்பதை நாங்கள் நன்றாய் அறிவோம். ஆகையால்தான் உங்களுக்கு இந்தக் கடிதம் எழுதுகிறோம். சுவாமீ! இந்தக் கடிதம் கண்ட க்ஷணம் முதல், நீங்கள், சாவித்திரியம்மாளுக்கு நிகழவிருக்கும் அக்கிரம விவாகத்தை நிறுத்த முயற்சிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்து அந்தப் பரிதாபகர விவாகத்தை நிறுத்திவிடுங்கள். உடனே ரமணியம்மாள் ஜனார்த்தனரிடத்து வந்து

விடுவாள். ஆனால், ஒரே ஒரு முக்கியமான எச்சரிக்கை. நீங்களேனும் ஜனார்த்தனரேனும் நாங்கள் யாவரென்றாவது ரமணி எங்கே இருக்கிறாளென்றாவது அறிய எவ்விதமாகவேனும் ஒரு அற்ப முயற்சி செய்தாலும் ரமணியை ஒருகாலுங் காணமாட்டீர்கள். நிச்சயம். உங்கள் சிறந்த புத்தி சூக்ஷ்மத்தையும் உங்கள் அற்புத சக்திகளையும் இனிச் சாவித்திரியம்மாள் விஷயத்திற் செலுத்துங்கள். ரமணியம்மாளைச் சிறிதுகாலம் மறந்து விடுங்கள். விஜயரங்கதாசர் விவாகத்தை நிறுத்துவதில் வெற்றிபெற்றீர்களானால் அந்த அம்மாள் சிறையினின்று விடுபட்டுப் பத்திரமாய் ஜனார்த்தனரிடம் சேர்வாள். இன்னும் அதிகமாகச் சொல்வது அநாவசியம்.''

இக் கடிதத்தைப் பார்வையிட்ட பின்பு, சரஸ்வதிதாச சுவாமியும் ஜனார்த்தனனும் "இனி என்ன செய்வது'' என்பதைப்பற்றி அன்றுபகல் முழுவதும் ஆலோசித்தார்கள். இரவிலும் ஆலோசிக்கலாயினர். மிகக் கூர்மையான புத்தியுடைய இருவரும் ஆலோசித்து ஆலோசித்துக் கடைசியாய் இரவு சுமார் பதினொருமணிக்கு, "இனி ரமணியைத் தேடும் விஷயத்தை மறந்துவிட்டுச் சாவித்திரியின் விவாகத்தை நிறுத்தத் தகுந்த யத்தனங்கள் புரியவேண்டும். அந்த யத்தனங்களில் வெற்றிபெற்றால் தான் ரமணியைக் காணலாம். அன்றியும் சென்ற மங்களவாரம் இரவு ஜனார்த்தனன் சாவித்திரி வீட்டு ஜன்னலருகே நின்று அவளுக்களித்த வாக்கும் நிறைவேறுவதாகின்றது'' என்றுதான் தீர்மானித்தார்கள். இத் தீர்மானத்திற்குப் பிறகு இரவு சுமார் மூன்று மணி வரையில் "சாவித்திரியின் விவாகத்தை எவ்வாறு நிறுத்துவது?'' என்னும் விஷயத்தைப் பற்றி ஆலோசித்ததில் சுவாமி சொன்ன ஒரு யுக்தியை அநுசரிப்பதாகத் தீர்மானித்து இருவரும் நித்திரைக்குச் சென்றார்கள்.

மறுநாட் காலை கோச்வண்டி ஜனார்த்தனன் வீட்டு வாசல் முன்பு நின்றது. சரஸ்வதிதாச சுவாமிகளும் முத்தம்மாளும் வண்டியில் ஏறினார்கள். முத்தம்மாள் ஜனார்த்தனன் வீட்டுக்கு வந்ததிலிருந்து அவள் அவ் வீட்டுக்குப் பணிப்பெண்ணாயமர்ந்த ஒரு கோஷா ஸ்திரீயாக இருக்க வேண்டுமென்று சுவாமி நியமித்திருந்தார். இப்பொழுது இந்தக் கோஷா ஸ்திரீயும் சுவாமியும் கோச்வண்டியில் ஏறியது எங்கேபோவதற்காக? முத்தம்மாளுடைய பழைய எஜமானாகிய விஜயரங்கதாசர் வீட்டுக்குத் தான்.

சுமார் ஒன்பதேகால் மணிக்கு, கோச்வண்டி விஜயரங்கதாசர் வீட்டு முன்பு நின்றது. சந்யாசி மாத்திரம் வண்டியிலிருந் திழிந்தார். யாரும் வண்டிக்குள் பார்க்காதவாறும் வண்டியுள்ளிருக்கும் பெண் கீழே இறங்

காதவாறும் கவனித்துக்கொள்ளும்படி வண்டிக்காரனுக்கு ரகசியமாய்ச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுத் தாம் மாத்திரம் வீட்டுக்குள் நுழைந்தார். சற்று நேரத்தில் அந்த வீட்டு மாடியிலுள்ள ஒரு அறையில் எதிரில் ஒரு சோபாவின்மீது விஜயரங்கதாசர் அமர்ந்திருக்கத் தாம் ஒரு சொகுசான சாய்வு நாற்காலியில் வீற்றிருந்தனர் சுவாமி. பணியாள் ஒருவன் ஒரு பெரிய விசிறிகொண்டு விசிறி சுவாமிக்குக் களையாற்றிக்கொண்டிருந்தான்.

"தாங்களிருப்பது எவ்விடம்" என வினவினர் விஜயரங்கதாசர்.

"ஒரு விஷயம் தங்களோடு தனிமையிற் பேசவேண்டும். இவனை அனுப்பிவிடுங்கள்" என அதி மதுரமான குரலிற் பேசினுர் சுவாமி.

"நீ கீழே போ நடேசா!" என்றனர் விஜயரங்கர்.

அக் கட்டளைப் பிரகாரம் நடேசன் அகன்றுபோயினுன். அவன் போன நிமிஷ நேரத்திற்குப் பிறகு, சரஸ்வதிதாச சந்யாசி திடீரென எழுந்து சரேலென அறைக் கதவருகே சென்று 'படீல்' என்ற ஒரு பெருந் தொனி தொனிக்கும்படி அக் கதவைச் சார்த்தித் தாளிட்டார். விஜயரங்கதாசர் பெருந் திகிலுற்று வெளுத்த முகத்துடன் சோபாவிலிருந்து எழுந்தார். ஆனல் சந்யாசி அவர் இடக்கையைத் தம் வலக்கரத்தாற் பற்றி இறுக அழுத்தி "உட்காருங்கள், பயப்படவேண்டாம்" என்று ஒரு கர்ஜனை செய்தார். பிரபு மதிமருண்டு உட்கார்ந்துவிட்டார்.

"விஜயரங்க மகாப் பிரபு! நீங்கள் ரகசியமாய்ச் செய்த ஒரு அக்கிரம காரியமொன்றை நான் அறிந்துகொண்டேன். பகிரங்கமாகச் செய்ய நீங்கள் உத்தேசித்திருக்கும் மற்றொரு அக்கிரம காரியத்தை நிறைவேற்ருதிருக்கும்படி நிரம்ப விநயத்துடன் உங்களைக் கேட்டுக் கொள்ளுவதற்காகவே நான் வந்தேன்" என்றனர் சுவாமி.

"என்—ன கா—ரியம்?" என மெல்லக் கேட்டனர் பிரபு. உண்மையில் அவர் பெருங் கோழை. பாவம், என்னசெய்வார்!

"என்ன காரியமா! சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள். தங்களுக்கு இப்போது சுமார் எழுபது வயதிருக்குமென்று நான் மதிக்கிறேன். எழுபது வயதுப் பாலேந்திரனுகிய நீங்கள் சுமார் பதினைந்து வயதுள்ள ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள நிச்சயித்திருக்கிறீர்களல்லவா. அந்த ஆசையை நீங்கள் மறந்துவிடவேண்டும்."

"நீங்கள் யார்?".

"நான் யாரென்று நீங்கள் அறியவேண்டிய ஆவசிகமில்லை. நீங்கள் நிச்சயித்த விவாகத்தை நிறுத்தவேண்டியதுதான் அத்தியாவசிகம்."

482



"இதென்ன விநோதம்! நிச்சிதார்த்தமாய்விட்டது. இனி, கலியாணத்தை நிறுத்தலாமா?"

"நிறுத்தத்தான் வேண்டும்."

"அது ஒருகாலும் கூடாதகாரியம்."

"கூடாத காரியமா!" என்ற ஒரு பெருங் கர்ஜனையோடு ஆவேசத்துடன் எழுந்து தம் யானை முகப்பிடித் தடியால் பூமியை ஒரு இடி இடித்தார் சுவாமி.

அப்பொழுது விஜயரங்கதாசர் பிரமித்து நின்றுவிட்டார். சற்று நேரம் அவரை மௌனமாய் உற்று நோக்கிவிட்டு நமது சந்யாசி "கூடாத காரியமென்று சொல்லுகிறீர்! நான் உத்தேசித்த எந்தக் காரியும் நிறைவேறாமற்போகும்! விஜயரங்கதாசரே! நான் சொல்லுகிறபடி நீராக அந்தக் கலியாணத்தை நிறுத்திவிட்டால் பிழைத்தீர். அப்படிச் செய்ய மனம் வராவிட்டால் நானே வெகு சுலபமாய் அதை நிறுத்திவிடுவேன். நீர் என் சொற்படி நடவாததற்காக நான் உமக்கு விதிக்கும் தண்டனைகளை நீர் அநுபவிக்கவேண்டும்" என்றனர்.

"நீர் எப்படி நிறுத்துவீர்?"

"உன்னை ஜெயிலுக்கு அனுப்பி."

"என்னையா!"

"ஆமாம். உன்னைத்தான். இந்த க்ஷணத்திலேயே உன்னை ஜெயிலுக் கனுப்ப எனக்குச் சக்தியுண்டு. அதுமாத்திரமல்ல. இந்த க்ஷணத்திலேயே உன் ஆஸ்திகளையெல்லாம் இழந்து நீ பிக்ஷாடனம் செய்யும்படி செய்யவும் எனக்குச் சக்தியுண்டு."

இம்மொழிகளைக் கேட்டதும் விஜயரங்கதாசருக்குக் கடுங்கோப முண்டாயிற்று. "சிச்சீ! என் வீட்டிலேயே வந்து என்னை அவதூறாகப் பேசினதற்கு இப்பொழுதே உன்மேல் மானநஷ்ட—"

அவர் பேசி முடிப்பதற்குள் சந்யாசியின் பேரிடிக் குரல் முழங்கலாயிற்று. "கிழப் பிசாசமே! பரிசுத்தமான என்னைப்பற்றி அவதூறான ஒரு அக்ஷரம் இனிச் சொல்வாயானால், இந்த இடத்திலேயே நாயை அடித்தாற்போல் அடித்து உன்னை அடக்குவேன்" என்று கம்பீரமாய் மந்திரத் தடியை ஓங்கி நின்றார்.

( தொடரும். )

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

483



# இந்துக்களின் பூர்வீக இரண வைத்தியம்.

---

கல்கட்டாவில் வசிக்கும் டாக்டர் சி. என். முகோபாத்தியாயா இந்துக்களின் பூர்வீக ரணவைத்தியத்தைப் பற்றி 2 வால்யூம் அடங்கின ஒரு புஸ்தகம் எழுத, அந்தப் புஸ்தகத்தை கல்கட்டா யூனிவர்ஸிடி பிரசுரம் செய்திருக்கிறது. இந்து வேதங்களில், முக்கியமாய் ரிக்வேதத்தில் அவயவங்களை யிழந்த மனிதருக்கு அவைகளைப்போலச் செய்த செயற்கை அவயவங்களை அமைத்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. யுத்த களங்களில் காயம்பட்டவர்களுக்கு அந்தக் காயத்தைக் குணப்படுத்த இரணவைத்தியர்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் அந்த உயர்ந்த வித்தையை இந்துக்கள் இப்போது என் மறந்துவிட்டார்கள். இதற்குக் காரணம் டாக்டர் முகோபாத்தியாயாவின் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. பௌத்த மதம் ஸ்தாபிக்கப்பட்டுப் பிரபலமான காலம் வரையில் இந்த வித்தையை இந்துக்கள் அனுஷ்டித்து வந்தார்களென்றும், அந்த மதத்தை ஸ்தாபித்து நடத்தினவர்கள் பிணத்தை அறுத்து வைத்தியம் கற்றுக்கொள்வதை வெறுத்தபடியால், அந்த வித்தையின் அனுஷ்டானம் நின்றுபோய்விட்டதென்றும் இந்த நூலாசிரியர் சொல்லுகின்றார். மேலும், மகம்மதியர் ராஜாங்கம் நடத்தின காலத்தில், இந்துக்களின் சாஸ்திரங்களையும் கலைகளையும் மதிக்காமல் அசட்டை செய்து வந்தார்கள். அதனாலும் ரணவைத்தியம் இந்தியாவில் நின்றுபோய்விட்டது.

அசோக மகாராஜா காலத்தில் பௌத்த மதம் இந்து மதம் இரண்டும் பிரபலமாயிருந்தன. அப்போது இந்தியாவில் பல இடங்களில் பல ஆஸ்பிடல்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இக்காலத்தைப்போல அக்காலத்திலும் ஆஸ்பிடல்களில் புழுதி, விசேஷக் கூட்டம், அதிக உஷ்ணம் இந்தக் குறைகளும், அசுத்தமும் சுகக் குறைவும் உண்டாக்கக்கூடிய மற்றக் குறைகளும் கூடாவென்று தடுக்கப்பட்டன. அக்காலத்திலேயே உடம்பைப் பிடித்துவிடுதல் முக்கியமான சிகிச்சையாகக் கொள்ளப்பட்டது. ஆஸ்பிடல்களில் வியாதியஸ்தர்களுக்குப் பணிவிடை செய்வோர் சங்கீதம் தெரிந்தவர்களாயும் சாலக்காய்ப் பேசக்கூடியவர்களாயும் இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்துக்களிடமிருந்து ரண வைத்தியத்தை அரேபிய தேசத்து மகம்மதியர்கள் கற்றுக்கொண்டார்கள். மகம்மதியர்களிடமிருந்து கிரேக்கர் (கிரீஸ் தேசத்தார்) கற்றுக்கொண்டார்கள். கிரேக்க தேசத்தார்

பல வழிகளில் நாகரிகம் பெற்றவர்களா யிருந்தபடியால், அவர்களிட மிருந்து பிற்காலம் ஐரோப்பிய தேசத்தார் பல வித்தைகளைக் கற்றூர்கள். கிரேக்கரிடத்திலும் ரோமானியரிடத்திலும் ஐரோப்பியருக்கு அதிக மதிப்பு. ஆகையால் கிரேக்கர்கள் இந்தியர்களிடமிருந்து எதையும் கற்றுக்கொண்டார்களென்று ஒப்புக்கொள்ள மனம் வருவதில்லை. ஆகையால் இந்தப் புஸ்தகத்தைப்பற்றி அபிப்பிராயம் சொன்ன ஒரு ஆங்கிலேயப் பத்திரிகை, இந்துக்கள் கிரேக்கர் இருவரும் மூன்றுவது மனுஷரிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கவேண்டுமென்று எழுதுகிறது. டாக்டர் முகோபாத்தியாயா எழுதின புஸ்தகம் 2 வால்யூம் கொண்டது என்று சொன்னேம். இரண்டாவது வால்யூமில் இந்துக்கள் உபயோகப்படுத்தின ஆயுதங்களின் படங்கள் காணப்படுகின்றன. அந்தப் படங்களைப் பார்க்கும்போது இந்தியர் உபயோகப்படுத்தின ஆயுதங்கள், கிரேக்கர் உபயோகப்படுத்தின ஆயுதங்களைவிடச் சிரேஷ்டமா யிருக்கின்றனவென்று தோன்றுவதாக அந்த ஆங்கிலேயப் பத்திரிகை அபிப்பிராயப்படுகின்றது.

(சுதேசமித்திரன்.)

---

## பிரகிருதி சாஸ்திரம்.

### முன்னுரை.

தமிழ்! தமிழ்! தமிழ்! நெஞ்சத்திற்கும், நாவிற்கும், செவிக்கும் இனிய தமிழ்ப் பாஷையை அபிவிர்த்தி செய்யவேண்டுமென்ற அவா சுமார் பத்து வருஷங்களுக்கு முன் இருந்ததைவிடப் பதின்மடங் கதிகமாய்த் தற்காலம் தமிழ் நாடெங்கும் பரவியிருக்கிறது. ஆனல் தமிழின் தற்காலத்திய அபிவிர்த்திக்குத் தக்க வழிகளனைத்தையும் தமிழ் நாடு இன்னும் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை யென்னலாம். தமிழிலுள்ள அநேக அரிய இலக்கிய நூற்களையும் இலக்கண நூற்களையும் வைதீக சாஸ்திரங்களையும் ஆராய்ந்து கற்பதும் அவற்றைப்போன்ற நூற்கள் இயற்றுவதுந்தான் தமிழபிவிர்த்திக்குரிய முக்கிய முயற்சிகள் என்று பெரும் பான்மையோர் கருதுகின்றூர்கள். உண்மையில் நமது தமிழை உன்னதப்படுத்த வேண்டுமாயின் முற்கூறிய சாதனங்கள் மாத்திரம் போதவே போதா. ஐரோப்பிய பாஷைகளிலுள்ள அநேக அருமையான விஷயங்கள் நமது பாஷையில் இப்போது காணப்படவில்லை. தேச சரித்திரங்கள், பூகோள சாஸ்திரம், வான சாஸ்திரம், உயர்தரக் கணித

சாஸ்திரம், பிரகிருதி சாஸ்திரம் முதலிய அநேக அரிய நூல்களாகிய பூஷணங்கள் நமது தமிழ்த் தாயின் மேனியில் துலங்கவேண்டும். பண்டைக்காலத்தில் தமிழும் தமிழ் நாடும் பெருஞ் சிறப்புற்றிருந்தனவெனத் தெரிகின்றதால், அக்காலத்தில் முற்கூறிய சாஸ்திரங்கள் தமிழில் அமைந்திருந்தாலும் இருக்கலாம். என்றாலும் தற்காலம் அந்த நூல்கள் ஐரோப்பிய பாஷைகளிற் பெருகியிருப்பதுபோல் நமது பாஷையில் இல்லவே யில்லை. ஆகவே ஐரோப்பிய பாஷைகள் அறிந்தவர்கள் அடையக்கூடும் இலௌகிக ஞானமவ்வளவு தமிழ் மாத்திரம் அறிந்தவர்கள் அடைதற்கில்லாமற் போகின்றது. ஆகையால் முற்கூறிய இலௌகிக சாஸ்திரங்களாகிய ஆபரணங்களை நமது தமிழ்த் தாய்க்கு அளிக்கவேண்டியது ஆவசிகம். அப்பொழுதுதான் அவள் இந்த உலகத்தில் தகுந்த அந்தஸ்தும் மதிப்பும் பெறுவாள்.

இலௌகிக சாஸ்திரங்கள் தமிழில் இல்லாத குறையை நிவர்த்திக்கும் பொறுப்பு, ஐரோப்பிய பாஷைகள் பயின்று அச்சாஸ்திரங்களில் நிபுணத்துவம் பெற்றிருப்பவர்களையே முக்கியமாய்ச் சார்ந்தது. ஆனல் அந்தப் பொறுப்பை வகிக்க அவர்களுக்குச் சுய பாஷா ஞானமும் வேண்டுவது ஆவசிகம். சுய பாஷா ஞானம் இல்லாமையாற்றான் அவர்களில் அநேகர் தாங்கள் இதர பாஷைகளிற் கற்ற அரிய விஷயங்களைத் தமிழில் எழுதச் சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். அவர்களிற் சிற்சிலரோ, தாங்கள் தமிழிடத்து அபிமானமுள்ளவர்களெனச் சொல்லி அவ்வபிமானத்தைக் காட்ட "நாவல்கள்" என்னும் கட்டுக்கதைகளாகிய ஸ்திரீ புருஷ வசிய நூல்களை எழுதுவதில் தங்கள் புத்தி சூக்ஷும மனைத்தையும் உபயோகிக்கிறார்களே யொழிய, ஐயகோ! பிரகிருதி சாஸ்திரம்போன்ற அறிவை விசேஷமாக விசாலிக்கச்செய்யும் நூல்களை எழுதுவாரைக் காணேம். ஒருவர் இருவர் எழுதினும் அவர்கள் எழுதுந் தமிழிலுள்ள விஷயங்கள் ஐரோப்பிய பாஷை கற்றவர்களுக்குத்தான் அர்த்தமாகின்றன. தனித் தமிழ்மாத்திர மறிந்தார் அவர்கள் எழுதுந் தமிழிலிருந்து அறிவைப் பெற வியலாமலிருக்கிறது.

தமிழுக் குயிராயிருக்கும் கலைமகள் எக்காலும் தமிழ் இந்த ஸ்திதியிலிருக்கச் சம்மதியாள். இனித் தமிழ் உன்னதமடையத்தான் வேண்டும். ஆகையால் இதர பாஷைகளிலுள்ள சாஸ்திரங்கள் தமிழில் அமையத்தான் வேண்டும். அவ்வாறு அமைந்து தமிழ் உண்மையில் உன்னதமடைவதற்குக் காலம் வந்துவிட்டது. அதற்கோர் சிறிய அறிகுறியாக, ஆங்கிலம் சிறிது பயின்று பிரகிருதி சாஸ்திரத்தில் யானுற்ற மிகச் சொற்ப அறிவையும் யானறிந்த தமிழ் நடையில் எழுதவேண்டு

மென்ற ஒரு ஆசை என் நெஞ்சிற் பொங்கச் செய்தனள் கலைவாணி. ஆகையால் துணிந்து இந்நூலைத் தொடங்குகின்றேன். என் இறைவியின் திருநாமத்தையே பூண்ட இந்தப் பத்திரிகை மூலமாய் இந்நூல் வெளிவர நேர்ந்தது எனக்கு விசேஷ உற்சாகத்தைக் கொடுக்கின்றதென்று மனப்பூர்வகமாய்ச் சொல்லுகிறேன். விஷயங்களைத் திட்டமாயும் தெளிவாயும் பொது ஜனங்களுக்குப் பிரியமான தமிழ் நடையில் எழுதத் தகுந்த சக்தியைச் சாரதா தேவி எனக் களிப்பாளென்று அந்த அம்மையையே முற்றும் நம்புகிறேன். யான் எடுத்த முயற்சி என்னால் திருப்திகரமாக நிறைவேற்ற இயலாத முயற்சியோ? என் நம்பிக்கையும் வீண் கனவுதானோ? அவ்வாறே யாயினும் இந்நூலைத் தொடங்கும் என் அகந்தையை க்ஷமிக்குமாறு அறிஞர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அகந்தையே யாயினும் இவ்வகந்தைக்கு முக்கிய காரணம் தமிழை எற்றமடையச் செய்யவேண்டுமென்ற கருத்தே. அதே காரணமாக எழுந்த அகந்தையே ஐரோப்பிய பாஷைகளறிந்து இலௌகிக சாஸ்திரங்களில் அதி பாண்டித்தியமுடைய பண்டிதர்களெல்லோருடைய உள்ளத்திலும் எழவேண்டுமென்பது என் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துள்ள ஒரு விருப்பம்.

அடுத்த சஞ்சிகையில் நூல் தொடங்கப்பெறும்.

பாரதி பக்தன்.

---

# இலக்கியப் பகுதி.

---

## சீவக சிந்தாமணி.

---

(க. நாமகளிலம்பகம்.)

(தொடர்ச்சி.)

கட்டியங்காரன் சேனையோடு அந்தப்புரத்தை வளைந்துகொண்டதை வாயில் காப்பாளனால் அறிந்த அரசன் திடுக்கிட்டு, கதவுகளையெல்லாம் தாழிடவும் தேர் முதலியவற்றைச் சித்தஞ்செய்யவும் மதிற் காவலர்கள் வரவும் கட்டளையிட்டு, பூரண கர்ப்பிணியாகிய தன் மனைவியை நோக்கி, "பெண்ணே! இச்சமயம் பிள்ளை காரணமாக உன்னை நீ காப்பாற்றிக்கொள்ளவேண்டுவது ஆவசிகமாதலின், இவ்விடத்தை விட்டு நீ

அப்புறப்படல்வேண்டும். ஏனெனில், நீ அன்று கங்குலிற் கண்ட கனவெல்லாம் பலித்துவிட்டன" என்று கூறினன். அது கேட்டலும் விசயை பூமாலைபோலச் சோர்ந்து நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையுற்றனள். உடனே அரசன் அவளை வாரித் தழுவி மூர்ச்சை தெளிவித்து மொழிகின்றான் :

10. சாதலும் பிறத்த றானுந் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலு மழிவு மெல்லா மவை பொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்.

11. தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா
வெல்லைய விவற்று ளெல்லா மேதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிக டம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
வில்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா.

இங்ஙனம் பலவித நீதிகளால் விசயையைத் தேற்றி, "மன்னர் உரிமையை முன்னே போக்கியல்லது தாம் போகார்; ஆதலால், இப்போக்கு எனக்குங் கருமம்; உனக்குங் கருமம்; ஏறுதற்கு ஊர்தியுஞ் சமைந்தது, இனிக் கவலவேண்டா, போவதே கருமம்" என்று கழறி, பிரிவுக் காற்றாது வருந்துகின்ற உயிர்க் காதலியை இறைவனது ஆணை கூறி முன்னமே தான் செய்வித்த மயிற்பொறிமே லேற்றி மகப்பேற்றைக் கருதி ஆகாய வழியே வேறிடஞ் செல்லவிடுத்தனன்.

பின்னர், சச்சந்தன் வெளியில் வந்து கட்டியங்காரனோடும் அவன் சேனைகளோடும் வெகு தீரமாகப் போர்புரிந்து பின்பு அவனால் மாய்ந்தனன். அப்பாற் கட்டியங்காரன் வெற்றி முரசறைவித்து எல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டனன்.

---

10. பெண்ணே! சாதலும் பிறத்தலும் ஆதலும் அழிதலும் இவையெல்லாம் தம் வினைகளின் பயத்தானுண்டாம்;. ஆண்டுச் சாதற்கும் அழிதற்கும் துன்புறுதலும், பிறத்தற்கும் ஆதற்கும் இன்புறுதலும் எல்லாம் அறிவின்மையன்றே; நீ இங்ஙனமாதலிற் பெரிதும் அறிவிலியாயிருந்தாய், அவ்வினையுறுதல் பொருட்கு இயல்புகாண் என்றானென்க.

11. நம்முடைய பழைய மானிடப் பிறப்பை யெண்ணின் வெண்மணலும் உறையிடப்போகாத எல்லையுடையன; அப்பிறவியுளெல்லாம் பிறந்தும் வேறுபட்டேம்; இனி இவ்வுடம்பை நீங்கிச் செல்லுங் கதியிலுஞ் சேரேம்; ஆதலின் இப்பொழுது சேர்ந்து நின்ற இரண்டு நாளையுறவை உறவாகக் கருதி அதற் கிரங்கவேண்டா வென்றானென்க.

இரண்டு நாள் — சிறிதுநா ளென்னும் பொருட்டு.

இஃதிங்ஙனமாக, ஆகாய வழியே செல்லும விசயை அம்முரசொலியைக் கேட்டுக் கலங்கி, தான் ஊர்ந்து செல்லும் மயிற்பொறியை முறுக்கி நடத்தமாட்டாது மூர்ச்சித்தமையால், அப்பொறி அப்பாற் செல்லமாட்டாமல் அந்நகரைச் சார்ந்த ஓர் மயானத்தினிடையே மெல்ல வீழ்ந்தது.

உடனே விசயை அவ்விடத்து ஓர் ஆண் மகவைப் பெற்றுக் கவலை சிறிது நீங்கி அக் குழந்தைக்குப் பாலூட்டி, அரசன் இறந்ததற் கிரங்கி, அப்பிள்ளையை நோக்கி, "மகனே! அரசன் பல பல சிறப்புச் செய்யப் பிறக்கும் நீ பாவியேன் காண இங்ஙனம் பிறப்பது தகுதியா? உலகுடையாய்! நீ கிடக்கின்ற இடம் இப்போது பகைவனிடமா யிருக்கின்றது; நினது பாயலோ சுடுகாடாயுள்ளது; யானும் உசாவுதற்கு ஒரு துணையு மில்லாத் தனிமையளாய் நிற்கின்றேன்; நின்னை வேறிடத்திற்குக் கொண்டுபோகக் கருதில் இக்காலம் போகவொண்ணாத இருளாயிருக்கின்றது; மேல் நீ வளருமாறும் அறியேன்; சிந்தாமணியே! நீ ஒன்று முரையாமற் கிடவாநின்றாய்; எனது வருத்தம் நீங்கப் பிறந்த நீ, என்னிடத்துப் பிறந்த துன்பக் கடலை யான் நீந்தும் தெப்பமாகாத பொழுது என்னைக் காப்பவர் யாவர்? உரைக்கின்றிலை" என்று கூறித் தனியே யிருந்து புலம்பும் பொழுது, அம் மயானத்துள்ள தெய்வமொன்று மனமிரங்கி, அவள் தோழியாகிய சண்பகமாலை வடிவங்கொண்டு அவள் முன்னே வந்து, துயரம் தீரும்படி அவளுக்கு இனிய வார்த்தைகளைச் சொல்லி, அவளிடத்திருந்த சச்சந்தன் பெய ரொழுதப்பட்டுள்ள மோதிரத்தைக் குழந்தைக்குச் சேர்த்தி, அக்குழந்தையை ஓர் படுக்கைமீது கிடத்தி, விசயையை நோக்கி, "காவியங் கண்ணினாய்! நின் மகன் வார்த்தையிலே உலகமெல்லாம் நடக்கும்; அங்ஙனம் நடத்தற்குப் பொருந்தாது நின்ற கட்டியங்காரனைக் கொல்லும்படி இவனை ஒருவன் இப்பொழுதே வந்து எடுத்துக்கொண்டு செல்வான்; ஆதலால் யாம் மறைந்து நிற்பது கருமம்" என்று கூற, உடனே விசயை விலகிச் சென்று மறைந்து,

12. நல்வினை செய்தி லாதே னம்பிநீ தமியை யாகிக்
கொல்வினை மாக்கள் சூழக் கிடத்தியோ வென்று விம்மாப்
புல்லிய கொம்பு தானோர் கருவிளை பூத்த தேபோ
லொல்கியோர் கொம்பு பற்றி யொருகணா னோக்கி நின்றாள்.

---

12. நின்னைப் பெறுதற்கு நல்வினை செய்து வளர்த்தற்கு நல்வினை செய்யாதேனுடைய நம்பி! நீ தனிமையாய்க் கொடிய விலங்குகள் சூழக்

அவள் அப்படி நிற்கையில், இறந்துபோன தன் குழந்தையைப் புதைப்பதற்கு அங்கே வந்த கந்துக்கடன் என்னும் வணிகனொருவன் எவருமின்றித் தனியே கிடந்த அக்குழந்தையைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி கொண்டு அதன் கையிலிருந்த மோதிரத்தால் இராச புத்திரனென் றறிந்து, பிறர் அறிந்துகொள்ளாதபடி அம் மோதிரத்தை மறைத்துக் கொண்டவனய் அக் குழந்தையை அன்போடெடுப்ப, அது தும்மிற்று. அப்பொழுது தெய்வம் 'சீவ' என்று வாழ்த்திற்று. பின்பு கந்துக்கடன் அக் குழந்தையை யெடுத்துக்கொண்டு விரைந்து சென்று இராசமாபுரத் துள்ள தன் வீட்டினுள்ளே புகுந்து தன் மனைவியாகிய சுநந்தையை நோக்கி, "நின் மகன் சாதலில்நின்றும் தப்பினன்" என்று கூறிக் கொடுப்ப, அவள் தொழுது வாங்கிப் பெருமகிழ்ச்சியுற்று வளர்த்துவரும் நாளில், முன்னம் தெய்வம் சீவ என்று வாழ்த்தினமைபற்றி, அறிவுடை யோர் அப்பிள்ளைக்குச் சீவகன் என்று நாமகரணம் செய்தனர்.

(வரும்.)

பத்திராதிபர்.

---

## ஐயவினா.

---

### மணிமேகலை ஆராய்ச்சிக்காரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

மணிமேகலை அறவணர்த்தொழுத காதை 77-வது வரியில்,

"ஈரெண் ணூற்றோ டீரெட் டாண்டில்"

என்று கூறப்பட்டிருக்கும் காலம் யாது? அக்காலம் சென்றுவிட்டதா? இனி நிகழப்போகின்றதா? எதை ஆதாரமாகக்கொண்டு இதனை நிச்ச யிக்கவேண்டும்? இவற்றிற்கு மணிமேகலை, பௌத்த நூல்கள் முதலிய வைகளை ஆராய்ச்சி செய்திருக்கும் கனவான்கள் இப்பத்திரிகை வாயி லாக விடையளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

T. R. M. S.

---

கிடத்தியோவென்று அழுது, கொம்பைப் புல்லிய கருவிளைதான் ஒரு பூவைப் பூத்ததுபோல ஓர் கொம்பைப்பற்றி ஒதுங்கி ஒரு கண்ணாலே நோக்கி நின்றாளென்க.

# இலக்கணப் பகுதி.

## தொல்காப்பியம்.

நச்சினார்க்கினியம்.

### பொருளதிகாரம்.

மரபியல்.

(முற்றொடர்ச்சி.)

கக. பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.

இ-ள். மேற்கூறிய நாய், பன்றி, புலி, முயல், நரி என்னும் ஐந்து சாதியுள்ளும் நாயொழித்து ஒழிந்த நான்கற்கும் பிள்ளையென்னும் பெயர்க்கொடையும் உரித்து எ-று.

இவை செய்யுட்கண் வருவன கண்டுகொள்க. கொள்ளுங்காலை யென்றதனான் முற்கூறிய நாய் முதலாகிய் நான்கும் விலக்கி நரிப் பிள்ளையென்பதே கோடலும் ஒன்று.

கஉ. யாடுங் குதிரையு நவ்வியு முழையு
மோடும் புல்வா யுளப்பட மறியே.

இ-ள். யாடு, குதிரை, நவ்வி, முழை, புல்வாய் என்னும் இவ் வைந்து சாதியின் இளமைப் பெயர் மறியெனப்படும் எ-று.

அவை "மறித்தருத் தொகுத்த பறிப்புற விடையன்" எனவும், "உள்ளில் வயிற்ற வெள்ளைமறி" எனவும் யாட்டின்மேல் வந்தன. மறிக் குதிரையெனவும் மறிநூக்கிற்றெனவும் சொல்லுதலின் இது குதிரைக் கும் உரித்தாயிற்று. "நவ்வி நான்மறி கவ்விக் கடன்கழிக்கும்" எனவும், "மறியாடு மருங்கின் மடப்பிணைதழீஇ" எனவும், "தெறித்துநடை மா மிற்றன் மறிக்குநிழ லாகி" எனவும் இவை நவ்வியும் உழையும் புல்வாயும் முறையானே மறியென்னும் பெயர் எய்தியவாறு அவ்வச் செய்யுளுட் கண்டுகொள்க. நவ்வியும் உழையும் புல்வாயுள் அடங்குமன்றே அவற்றை மூன்றாக ஓதியதென்னை? நாயென்றதுபோல அடங்காதோவெனின், மாவென்பது குதிரையும் ஆனையும் புலியும் சிங்கமும் முதலாயவற்றுக் கெல்லாம் பெயராகலின் அவ்வாறு ஓசானென்பது. ஓடும் புல்வா யென்றதனானே மடனுடையன நவ்வியெனவும் இடைநிகரன உழை யெனவுங் கொள்க,

கஅ. கோடுவாழ் குரங்குங் குட்டி கூறப.

இ-ள். கோட்டினையே வாழ்க்கையாகவுடைய குரங்கும் குட்டியென்று கூறப்படும் எ-று.

கோடுவாழ் குரங்கெனவே குரங்கின் பிறப்புப் பகுதியெல்லாங் கொள்க. அவை குரங்குக்குட்டி முசுக்குட்டி ஊகக்குட்டி யென்பன. உம்மை இறந்தது தழீயிற்றாதலான் மேற்கூறிய யாடு முதலாகிய ஐந்து சாதிக்குங் குட்டியென்னும் பெயர் கூறப்படுமென்பது. அவை யாட்டுக்குட்டி குதிரைக்குட்டி நவ்விக்குட்டி உழைமான்குட்டி புல்வாய்க்குட்டி எனவரும்.

இலக்கணக்குட்டி.

## சாத்திரப் பகுதி.

### நியாயமாலா.

( முன் தொடர்ச்சி. )

79. வீசீ தரங்க நியாயம்: — வீசீ - அலை, தரங்கம் - அலை, நியாயம் - திருஷ்டாந்தம். இது உத்தரோத்தர கர்மத்துக்குப் பூர்வ பூர்வ கர்மம் காரணமாத விதுபோலவென்கின்றது. அதாவது: பின் பின் உண்டாகின்ற அலைக்கு முன் முன் அலை காரணமாதல்போல வென்பதாம்.

80. தடாக நீரோபயோஜன நியாயம்: — தடாகம் - குளம், நீரம் - ஜலம், உபயோஜனம் - உபயோகப்படுதல், நியாயம் - திருஷ்டாந்தம். இது வக்தா (சொல்பவன்) வின் மனம் இராகாதிகளால் கலக்கமடையும்படி செய்யாமல் அவரிடத்துச் சாரங்களைக் கிரகித்த விதுபோலவென்கின்றது. அதாவது: தடாக ஜலத்தைக் கலக்கிவிடாமல் தெளிந்துள்ள ஜலத்தைக் கொள்ளல்போல வென்பதாம்.

81. மதுகர நியாயம்: — மதுகரம் - வண்டு, நியாயம் - திருஷ்டாந்தம். இது துறவிகள் கிரகஸ்தர் இல்லங்களில் சென்று சிறிது சிறிதாக யாசித்து உண்டு பசியாறி யிருத்த விதுபோலவென்கின்றது. அதாவது: வண்டானது பல புஷ்பங்களிலும் சென்று கொஞ்சங்கொஞ்சமாய்த் தேனைக் கிரகித்து உண்டு களித்திருப்பதுபோல வென்பதாம்.

82. சசாங்க நியாயம்:—சசாங்கன் - சந்திரன், நியாயம் - திருஷ்டாந்தம். இது பெரியார் தமது குறையைத் தீர்ப்பதற்குக் கவலையுறாமல்,

492



உலகர்க்குற்ற குறையைத் தீர்ப்பதற்கு முந்துத லிதுபோலவென்கின்றது. அதாவது: சந்திரனுனவன் தன்பாலுற்ற களங்கமாகிய இருளை நீக்குதற்கு முயலாமல் உலகர்க்குற்ற பேரிருளை நீக்குதல்போல வென்பதாம்.

83. உபயதஸ்பாசா ரச்சு நியாயம்: — உபயதஸ்பாசா - இரண்டு புறத்திலும் கட்டப்பட்ட, ரச்சு - கயிறு, நியாயம்- திருஷ்டாந்தம். இது பூர்வபக்ஷி தான் தன் கக்ஷியை ஸ்தாபிக்க எடுத்துக்கொண்ட இரண்டு மார்க்கத்திலும் செல்லுதற்குக் கூடாமல் தர்க்கமாகிய கயிற்றால் இரு புறத்திலும் சித்தாந்தியால் கட்டப்பட்டு இருத்த லிதுபோலவென்கின்றது. அதாவது: ஒருவனை இரண்டுபுறத்திலும் கயிற்றால் கட்டிவிட்டாற்போல வென்பதாம்.

84. களக் கிரக நியாயம்: — களம் - கழுத்து, கிரகம் - பிடித்தல், நியாயம் - திருஷ்டாந்தம். இது பூர்வபக்ஷியை அவன் கக்ஷியைப் பேசவொட்டாமல் நியாயத்தால் பிடித்த லிதுபோலவென்கின்றது. அதாவது: ஒருவனை யாதொன்றும் பேசவொட்டாமல் தொண்டையைப் பிடித்தல் போல வென்பதாம்.

அநந்தபத்மநாபஸ்வாமி,
காஞ்சீபுரம்.

---

## சன்மார்க்கம்.

( தொடர்ச்சி. )

எம். ஏ. பரீக்ஷை கொடுத்தாலும், உபாத்தியாயர் தொழிலைப் பெறுவதற்குப் போதனு சக்தி (சிறப்புப்) பரீக்ஷையிலும் தேறல் வேண்டு மல்லவா? அப்படியே, மற்றத் தொழில்கள் ஒவ்வொன்றிலும் சிறப்பு யோக்யதையைப் பெறவேண்டும். அதுபோல ஈசுவரனையும், தன்னையும் பிரபஞ்சத்தையும் அறிந்து ஈசுவரனை வழிபாடு செய்து முத்தி அடைவதற்கும் சிறப்பு வழி அவசியம் வேண்டற்பாலது. அதுவே ஆகம மார்க்கமாம். இவ் வாகமங்கள் திரி பதார்த்தமாகிய பதி பசு பாசங்களின் இலக்கணங்களை ஐயந்திரிபு அற விளக்கிக்காட்டும் சைவசித்தாந்தத்தையே கூறுநிற்கும். இச் சைவசித்தாந்த மார்க்கமே சன்மார்க்கமாகும். என்னை யோவெனில்,

"பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்து

ஒசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே"

என்றார் தவசிரேஷ்டரான திருமூலர். இம்மட்டோ, முனிவர் சித்தர் இந்திராதி தேவர் முதலிய யாவருக்கும் இச்சைவ சித்தாந்த சன்மார்க்கமே தாயகமாக உள்ளதென்பார்,

"அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின் றறிஞரெலா நடுவறிய வணிமா வாதி, வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம் வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்றும், இந்திராதி போகநலம் பெற்ற பேர்க்கு மிது வன்றித் தாயகம்வே றில்லை யில்லை, சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத் தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்"

என்றார் சிவாநுபவச் செல்வராகிய தாயுமான சுவாமிகளும். இனி, இம் மார்க்கமானது,

"வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே
அவற்றுள்
இலைகொண்டு வந்தனர் பலரே யிலையொரீஇத்
தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
வோரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்"

என்னும் அறுமுகச் சிவனார் திருமுகக் கருணைவாய்ந்த குமாரகுருபர சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி, பிறநெறிகளையெல்லாம் தனக்குச் சோபானமாக வற்று அந்நெறிப்பட்டாரை முடிவிற் றன்பாற் சேர்த்துக் கோடலானும் பிறநெறிக ளிங்ஙனமின்றி யொன்றை யொன்று வெறுத் தொதுக்குதலானும் இச் சைவ சித்தாந்த நன்மார்க்கமே சன்மார்க்கமா மென்பது கரதலாமலகமாகும். இன்னும், இச் சமயமானது பிருதிவி தத்துவமுதல் சிவதத்துவமீறாகத் தத்துவங்கள் முப்பத்தாறெனவும், இவைகளைக் கடந்து நிற்றலாற் சிவபிரான் தத்துவாதீதராவரெனவுங் கூறுவதாலும், பிற சமயங்களெல்லாம் பெரும்பாலும் இம் முப்பத்தாறனுள் ஆன்மதத்துவம் இருபத்துநாலி லடங்கி அத் தத்துவப் பொருள்களையே

பரம்பொருளெனக் கோடலானும், அவையெல்லா மிதனுள் வியாப்பியமா யடங்க இது வியாபகமா யொன்றினு மடங்காமல் அவற்றையெல்லாங் கடந்து நிற்றலான் இதனையே அதீத சமயமெனவும், இந்நெறிச் சென்று பெறும்பொருளே பழம்பொருளாமெனவுந் தெளிந்த நம் தாயுமான சுவாமிகள்,

"சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாருஞ் செகத்தீரே"

என்று திருவாய் மலர்ந்தருளுவாராயினர். இது நிற்க, சன்மார்க்கமென்பதற்குப் பொதுவகையில் நல்லொழுக்கமெனப் பொருள்கொண்டு அறநூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன வொழித்தலுமாமென்பது மொன்று. கடவுள் பக்தி, அடியார் பக்தி, ஜீவதயை, அன்பு, பரோபகாரம், வாய்மை, கொல்லாமை, கள்ளுண்ணாமை முதலியவாகப் பல வேறு விரித்துக் கூறப்பட்ட ஒழுக்க வகைகளெல்லாம் சைவர்க ளின்றியமையாது மேற்கொள்ள வேண்டுமென்று சித்தாந்த நூல்கள் வற்புறுத்திக் கூறுகின்றன.

(தொடரும்.)

**போ. மாணிக்கசெட்டியார்,**

தாதம்பேட்டை பழூர்.

---

## குருபக்தி.

(தொடர்ச்சி.)

ஆகையால் இச்சம்சாரமான பாலையில் தவிக்கும் தீனனான புருஷனிடம் கருணையாற் சென்று "குழந்தாய்! சகல தாபத்தினின்றும் விடுபட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கிக் களிக்கும் மார்க்கம் ஒன்றுளது. அதுவும் மிகச் சுலபமே. அதனை வெகு எளிதில் நினக்குக் காண்பிப்பன்" எனக் கூறும் புண்ணியனை நம்பி அவன் வழிநடக்கின் மிக்க மேன்மையை யடையத் தடையில்லை. அங்ஙனமில்லாது, "நமக்கு அத்தகைய பெரிய விஷயங்களைப் போதிக்க வருமிவன் எத்தகையன்? பிரம ஞானமிவனுக்கேது? ஞானமடைந்த மகான்கள் இப்படித்தான் நம்மைப்போல் காமக் குரோதாதிகளை வைத்துக்கொண்டும் சுக துக்கங்களை யடைந்துகொண்டும் எல்லோர் கண்களுக்கும் புலப்படும்படியாகவும் இவ்வுலகில்

495



திரிவார்களோ? மேலும் இவர்கள் நம்மைக் கவனிப்பானேன்? நம்முடைய ஆசிரய மிவர்கட் கெதற்கு" என்னு மிவைபோன்ற குதர்க்கங்களைப் பேசிக்கொண்டும், தாமும் கடைத்தேறும் மார்க்கமின்றி, மற்றோருக்கும் துர்ப்புத்தி புகட்டிக் கெடுத்துக்கொண்டும் பலர் திரிகிறார்கள். அவர்கட்கு இவ் விவேகம் பயன்படும்:—

சகோதா ரிருவர் ஆற்றுக்கப்பாலிருக்கும் தம் தாய் வியாதியால் பீடிக்கப்பட்டு மிகுந்த அபாயமான ஸ்திதியி லிருப்பதாய்க் கேள்வியுற்றுப் புறப்பட்டு வருகையில், அவ் வாறு வெள்ளத்தால் பெருக்கெடுத்து இவர்கள் பயணத்தைத் தடைசெய்தது. அதைக் கண்டு அவர்கள் தயங்கி நிற்கையில், சற்று தூரத்தில் ஓர் படகு பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அக்கரை சேர்ப்பதற்கு ஆயத்தமாய் நின்றது. அதைக் கண்ணுற்ற இளையோன், "அண்ணா! அதோ நிற்கும் படகில் நாமும் ஏறினால் மற்றவர்களைப்போல் நம்மையும் அது கரைசேர்த்துவிடும். அங்குப் பாருங்கள். படகு செலுத்துபவன் நம்மைச் சைகைகாட்டி யழைக்கின்றான். ஆகையால் சீக்கிரம் சென்று அதில் ஆரோகணிப்போம்" என வேண்டினான். அதைச் செவியேற்ற மௌட்ய சிகாமணியாகிய மற்றவன் தனதனுஜனைக் கடிந்து "அடே! மூடா!! அதில் ஏறாதே. ஏறினால் அதைப்போல் நீயும் அங்கு மிங்கு மல்லாடவேண்டும். அப்படி அது உன்னைக் கரையேற்றச் சாமர்த்தியமுடையதாயின், தன்னைக் கரையேற்றிக்கொள்ள மார்க்கமின்றி அங்கு மிங்கும் அல்லாடுமோ? என் செல்வமே! அதிலிருப்பவன் பேச்சைக் கேளாதே. அப்பாவி உன்னை வஞ்சித்துப் பொருள் பறித்துத் தன்னைப்போல் உன்னையும் மீளாத ஆபத்தில் உட்படுத்தப் பார்க்கிறான். என்னிரு கண்மணியே! அப் படகைச் சற்று நிதானித்துப் பார். கேவலம் மரப் பலகையால் சேர்க்கப்பட்டிருக்கிறது. கொஞ்சம் மோதினால் சுக்கல் சுக்கலாய்ப்போய் நம்மைத் தண்ணீரில் அமிழ்த்திவிடும். இப்பொழுது நம் பயணத்தை நிறுத்தி நாளை வெள்ளம் வடிந்தவுடன் சென்று தாயைக் காண்போம். நான் உனக்கு முதிர்ந்தவன். என் வார்த்தையை உல்லங்கனம் செய்யாதே! ஆபத்துக்குள்ளாவாய். உன் க்ஷேமத்தையே கோரியுள்ள நான் உனக்குக் கேடிழைப்பனோ?" என்று நயத்திலும் பயத்திலும் பற்பலவிதமாக எச்சரித்தான்.

(தொடரும்.)

M. V. சுப்ரமண்ய ஐயர்.

496



# புத்தக வரவு.

## சந்திர சேகரன் சரித்திரம்.

இஃது திரிகால மாயப்பிரசன்ன நவீனம் என்ற புத்தக வரிசையில் முதற் புத்தகமாகப் புதுவை ம. ா-ா-ஸ்ரீ நல். சவரிதாதமுதலியார் அவர்களால் பிரசுரிக்கப்பெற்ற ஒரு நாடகம். இப் புத்தகம் இடைக்கிடையே பற்பல இசைப்பாட்டுகளுடன் எழுதப் பெற்றிருக்கின்றது. இதன் விலை அணா 6. தபாற் செலவு அணா 2. இதனை நமக் கனுப்பிய இதன் பதிப்பாசிரியர்க்கு நன்றி செலுத்துகின்றோம்.

---

# சமாசாரம்.

### வேதாந்த உபந்நியாசம்.

மகாமகோபாத்தியாய வேதாந்தகேசரி கணபதி சாஸ்திரிகளின் முக்கிய சிஷ்யரான பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள், ஸ்ரீ சுவாராச்சாரியாரால் செய்யப்பெற்றதும், அத்வைத சித்தாந்த ரகஸ்யத்தை இனிது விளக்கக்கூடியதும், 163 சுலோகங்களுள்ளதும், மத விஷயமான எவ்வித சந்தேகத்தையும் ஒரே தடவை கேட்பதிலிருந்தே பறக்கடிக்கக் கூடியதுமான "ஸ்வாராஜ்ய சித்தி" என்னும் வேதாந்த நூலை ஆனி மீ 16-ம் உ முதல் பிரதிதினமும் மாலை 6½ மணிக்கு ஆரம்பித்து 8 மணிவரையில், புதுவைக் காளத்தீசுவரன் கோயில் வீதி, -ம் நெம்பர் கிருகத்தில் உபந்நியசித்து வருகின்றார். அச்சமயங்களில் அவ்விடத்தில் பல கனதனவான்களும் பெண்மணிகளும் வந்து சிரவணஞ்செய்து ஆநந்தமுறுகின்றார்கள். ஒரு மாதத்தில் இக் கிரந்தம் முடிவுபெறுமென்று சொல்லப்படுகிறது. பண்டிதர் கற்றவரன்றி மற்றவரும் நன்குணருமாறு சிறந்த தமிழ் நடையில், திருஷ்டாந்தத்துடன் உபதேசித்து வருகின்றார்.

---

### விருபாக்ஷிபுரம் சைவசித்தாந்த சபை.

இச் சபையினர் பிரபல முயற்சி எடுத்துக்கொண்டு இச் சபையின் முதல் வருடத்திய மஹோற்சவமும், ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூஜை வைபவமும் சென்ற ஆனந்த ஞு வைகாசி மீ 27-ம் உ வெகு சிறப்பாக நடத்திவைத்தனர். அன்று கூடிய மகா சபைக்குச் சுமார் 1000 அன்பர்கள் விஜயஞ்செய்திருந்தனர். அனைவருக்கும் போஜனங்கள் முதலிய நல்லுபசாரம் புரிந்தபின் பகல் 1 மணிக்கு விரிஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பர சுவாமிகளின் அக்கிராசனத்தின்கீழ் பல வித்வ சிரோமணி

497



களால் சைவ சமய சம்பந்தமான உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. சபை சம்பந்தமான வருடாந்த அறிக்கைப் பத்திரமும் வெளியிடப்பட்டிருக்கின்றது. வேண்டுவோர் காரியதரிசி, சைவ சித்தாந்த சபை, விருபாக்ஷிபுரம், இராயவேலூர் என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

### வேள்ளையூர்ச் சைவ சித்தாந்த சபை.

சென்னை வேதாகமோக்த வைதீக சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கிளைச் சபையாக, சென்ற வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இச் சபையின் முதல் வருடோற்சவம் 1914-ம் ௵ ஜுன் ௴ 15-ம் தேதி திங்கட்கிழமை, மணம் பூண்டி பக்த பால சமாஜம். திருக்கோவலூர் பார்க்கவ குலச் சங்கம், வடலூர் சமரச சன்மார்க்க சாதக சங்கம் முதலிய சபைகளின் ஸ்தாபக காரியதரிசியாகிய ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்கள் F. T. S. அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. விபூதி, ஆட்டம், கல்வி, ஆலயம், காலம், சுத்த ஆகாரம் என்னும் விஷயங்கள் பல வித்வான்களால் பிரசங்கிக்கப்பட்டன.

---

### சென்னை ஸ்டாண்டர்ட் பத்திரிகை.

இப் பத்திரிகையை மிஸ்ஸஸ் அனிபெசன்ட் அம்மையாரும் வேறொருவருமாகச் சேர்ந்து விலைக்கு வாங்கிவிட்டார்களாம்.

---

### ஜலமேல் நடத்தல்.

ஜெர்மெனி தேசத்திலேயுள்ள ஓர் சாஸ்திரி, நூதனமான பாதரக்ஷைகளை உண்டாக்கி யிருக்கின்றனர். இப் பாதரக்ஷைகளைக் காலில் தரித்துக்கொண்டு மணிக்கு ஒரு மைல் வீதம் ஜலத்தின்மேல் நடக்கக் கூடுமாம்.

---

### தெப்போற்சவத்தில் உயிர்ச்சேதங்கள்.

மைசூருக்கருகேயிருக்கும் நஞ்சன் கூடு என்ற சிவக்ஷேத்திரத்தில் நஞ்சுண்டேசுவரருக்கு இம் மாதம் 12-ம் ௳ கபிலாநதியில் தெப்போற்சவம் நடந்ததில் நதியில் திடீரென வெள்ளம் வந்து விட்டதால், தெப்பத்திலிருந்த ஸ்வாமியும் 25 மனிதர்களும் தெப்பத்துடன் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள். 25 மனிதர்களும் மூழ்கி இறந்தார்கள். தெப்பம் ஒரு மடுவில் ஆழ்ந்துவிட்டது. மறுநாள் நிரம்ப சிரமத்தோடு விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது. மைசூர்ப்பிராந்தியத்தில் மழைக்காலமாகிய இக்காலத்தில், வெள்ளம் வரக்கூடிய நதியில் தெப்போற்சவம் நடத்த முயன்றது என்ன விவேகமோ!

498

பல கண்காக்ஷிகளில்

மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து

இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

27. அசோக கிருதம்:— ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டைகாலங்களில் வெகு கடினமான சூலை நோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெரிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப் போகுதல் முதலிய ரஜோதோஷங்களும், யோனி சுருக்கம், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள். இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற ஔஷதம். சூதக சூலை ரோகங்களுக்கும், மற்றும் அநேக யோனி சம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மை செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

28. பிரஹத் சந்திரோதய மகரத்வஜம்:— தாது நஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மையில்லாமை இந்திரிய நஷ்டம், சொப்

499

பன ஸ்கலிதம், புத்தி பிரமை, மறதி, விந்து சீனம், சீக்கிரஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று, அபரிமிதமான புருஷத்தன்மையைத் தரும், சந்தேகமில்லை. இம்மருந்து சாப்பிடத் தொடங்கினநாள்முதல் நாளுக்குநாள் இதன் சிறந்த குணத்தைக் காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து புருஷத்தன்மையைச் சீக்கிரத்திலிழந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிடுவதால் வெகு சீக்கிரம் பூரண புருஷத்தன்மையை திரும்பப்பெற்று சுகிக்கலாம் என்பது நிச்சயம். ஏழு வேளை ஔஷதம் ரூபா 3, வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

29. சவன பிரசானம்:— இம்மருந்தினுல் ஈளை இருமல் சுவாசகாசம், க்ஷயம், தொண்டை ரணம், கபம், இன்னும் நுரை ஈரலைப்பற்றிய எல்லாவித வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும். இம்மருந்து பலஹீனத்தைப்போக்கி, தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும், காந்தியையும், தரும். சவனமகாரிஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்துகொடுக்கப்பட்டு ருஷி பாலியதசையடைந்ததாக ஆயுர்வேதசாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவன் பிருசனம் என்னும் சிறந்த ஔஷதம் டப்பா 1-க்கு ரூபா 2, வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

*Sri Venkatesa Perumal Koil Sannathy,*

TANJORE

---

N. B. — என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

கைவிடாதீர்கள்! ஏமாறுதீர்கள்!!



# சர்வதேள் விஷ சஞ்சீவி.

---

கதறிவந்தவன்

களிப்புடன் செல்வான்.



**விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்.**

**குணமில்லாவிடில் ரூபாய் 100 இனாம்.**

---

நண்பர்களே, ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, யாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும் கண்டு மதிக்கப்பட்ட எமது மேல்கண்ட லங்கர்மார்க்குள்ள சர்வ தேள் விஷ சஞ்சீவியைத் தேள் கொட்டினவிடத்தில் உபயோகிக்க உடனே இரண்டொரு நிமிஷத்துக்குள் குணமடையச்செய்யும். இச் சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாப்பு, நண்டுதுறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும் டைரக்ஷனில் எழுதிய பிரகாரம் உபயோகித்தால் குணமடையும். குணமில்லாவிடில் பணம் வாபஸ். இந்த லங்கர்மார்க்குள்ள சர்வ தேள்விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இச் சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது.

| | | |
|---|---|---|
| பாக்கெட் 1இ | ரூ | 0 — 8 — 0 |
| டஜன் பாக்கெட் | ரூ | 5 — 0 — 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

**வி. ஏ. எஸ். பாணி,**

3, இருளப்பன் தெரு,

மதராஸ்.